Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 402 / 2024

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | பூபதி | Calling: | ரயில்வே மேலாளர் ஓய்வு |
| Father's Name: | அருணாச்சலம் | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 62 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.03.2026

எதிரி ஆஜர். புகார்தாரர் ஆஜர்.

ம.த.சா.1 சாட்சி மனுவின் பேரில் அழைத்து குறுக்கு விசாரணை.

எதிரி என்னிடம் பணம் வாங்கும்போது பிள்ளைகளின் படிப்பிற்காக வாங்கியதாக நான் சொல்லியுள்ள நிலையில் அவரின் பிள்ளைகளின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எந்த படிப்பு சேர்வதற்காக பணம் கேட்டார் என தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் பிள்ளைகள் என்ன படித்துள்ளார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. எதிரி கடன் வாங்கும்போது அவரின் பிள்ளைகளின் படிப்பு சான்றவணங்கள் ஏதாவது வாங்கினேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் பிள்ளைகளின் படிப்பிற்காக எதிரி கடன் வாங்கிய விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு கடன் கொடுக்கும்போது சாட்சிகள் யாரையாவது அழைத்து வந்திருந்தாரா என்றால் இல்லை. நான் பணம் கொடுக்கும்போது சாட்சிகள் யாரையாவது வைத்து கொடுத்தேனா என்றால் எதிரி என் நண்பர் என்பதால் சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கவில்லை. எதிரி என் நண்பர் என்ற விவரத்தை வழக்கின் ஆவணத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வட்டி தொழில் செய்வதற்கு உரிமம் ஏதேனும் வைத்துள்ளேனா என்றால் இல்லை, நண்பர்களுக்கு மட்டும்

தான் கொடுப்பேன், அதனால் உரிமம் வாங்கவில்லை. நண்பர்களாக இருந்தாலும் சரி, மற்ற நபர்களாக இருந்தாலும் சரி, பணம் கொடுத்துவிட்டு வட்டி வாங்குவதற்கு உரிமம் வாங்க வேண்டும் என தெரியுமா என்றால் தெரியும். நான் பணியில் இருக்கும்போது எதிரிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் யார் யாருக்கு பணம் கொடுத்துள்ளேன் என்ற ஆவணங்களை பராமரித்து வருகிறேனா என்றால் வருகிறேன்.

இவ்வழக்கு உட்பட நான் தாக்கல் செய்துள்ள சுமார் 10 வழக்குகளுக்கு சம்மந்தமான கணக்கு வழக்குகளை பராமரித்து வருகிறேனா என்றால் வருகிறேன். எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் சம்மந்தமாக எழுதி வைத்த ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. வருமான வரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த பணத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். வருமான வரிக்கணக்கை எந்த ஆடிட்டர் வைத்து நான் பராமரிக்கிறேன் என்றால் KGF ராம் என்பவர் மூலம் பராமரிக்கிறேன். வருமான வரி கட்டும்போது இவ்வழக்கு காசோலை தொகை நிலுவையில் உள்ளதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் நண்பர்களை வைத்து மட்டும் தான் சீட்டு நடத்துகிறேனா என்றால் இல்லை, வெளிநபர்களை வைத்தும் நடத்துகிறேன். சீட்டு கம்பெனி பெயர் என்ன என்றால் இன்னும் பெயர் வைக்கவில்லை. சீட்டு கம்பெனிக்கு பெயர் வைக்காத காரணத்தினால் சீட்டு போடும் நபர்களுக்கு ஒரு அட்டை மட்டும் போட்டு தருவேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அட்டைதான் நான் சீட்டு போடும் நபர்களுக்கு போட்டு கொடுக்கும் அட்டை என்றால் B.நதியா, T.பாலு என்ற பெயரில் உள்ள அட்டை தான். **அந்த B.நதியா என்ற பெயரில் உள்ள நான்கு அட்டைகள் எ.சா.ஆ.1 ஆகவும் மற்றும் T.பாலு என்ற பெயரில் உள்ள நான்கு அட்டைகள் எ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

அந்த அட்டையில் குழு எண்.1 என்ற இடத்தில் உள்ள 5LE என்பது எதைக் குறிப்பிடுகிறது என்றால் குழு எண்ணை குறிக்கிறது. நான் எத்தனை குழு சீட்டு நடத்துகிறேன் என்றால் 4 குழு சீட்டுகள் நடத்துகிறேன். சீட்டில் உள்ள உறுப்பினர்கள் பெயர் தெரியுமா என்றால் நினைவில் இல்லை. சீட்டு பணத்தை கட்டும் போது அதற்கான ரசீது கொடுக்கும் பழக்கம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அட்டை தவிர

வேறு எதுவும் கொடுப்பதில்லை என்றால் சரிதான். சீட்டு பணம் கொடுக்கும்போது பிணையமாக ஏதேனும் ஆவணங்கள் வாங்குவேனா என்றால் இல்லை, கையெழுத்து மட்டும் தான் வாங்குவேன். Non Judicial Paper, Cheque, Conquer Sheet, A4 Sheet கையெழுத்து வாங்குவேன் என்றால் இல்லை. எதிரி பதிலறிவிப்பில் எழுதப்படாத காசோலையில் சீட்டு பணத்தை கொடுக்கும்போது கையொப்பம் வாங்கியதாக சொல்லியுள்ளார் என்றால் அது தவறான தகவல்கள் அடங்கிய அறிவிப்பு. மேற்படி அறிவிப்பிற்கு மறுப்பு தெரிவித்து பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. எதிரி காசோலையை பிணையமாக கொடுத்தார் என பதிலறிவிப்பில் கூறியுள்ள விவரத்தை நான் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் நான் என் வழக்கறிஞரிடம் கூறினேன்.

வழக்கறிஞர் அந்த விவரத்தை இந்த வழக்கின் முதன்மை சாட்சிய தாளில் கூறினாரா என்ற விவரம் குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிரி பதிலறிவிப்பில் காசோலையை கொடுக்கும்போது அவரது நண்பர் முருகேசன் என்பவர் உடன்வந்ததாக கூறியுள்ள நிலையில் முருகேசனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, பொய்யாக கூறியுள்ளார். B.நதியா, T.பாலு சீட்டு கட்டிக்கொண்டிருக்கும்போது தான் இந்த பணத்தை கொடுத்தேனா என்றால் சீட்டு பணத்தை முன்கூட்டியே முடித்துவிட்டு பணம் தேவை என கேட்டதால் கொடுத்தேன். எந்த தேதியில் சீட்டை முடித்து கொண்டார்கள் என்றால் அது குறித்து பார்த்து தான் சொல்ல முடியும். எவ்வளவு தொகைக்கு அந்த சீட்டை முடித்துக்கொண்டேன் என்றால் பார்த்து தான் சொல்ல முடியும். நான் எந்த ஆவணத்தை பார்த்து சொல்ல வேண்டும் என்றால் நான் தனிப்பட்ட முறையில் பராமரித்து வரும் பேப்பரை பார்த்து தான் சொல்ல முடியும். எனக்கும் எதிரிக்கும் சீட்டு தொகையில் எந்த நிலுவையும் இல்லை என்றால் சரிதான். எதிரி பதிலறிவிப்பில் அவரிடமிருந்து வாங்கிய காசோலையை வேறு இடத்தில் மறந்து வைத்துள்ளதாகவும், அதை பின்னர் எடுத்து தருவதாக கூறி காலதாமதம் செய்ததாக கூறியுள்ளார் என்றால் தவறான தகவல்.

எதிரி மற்றும் முருகேசன் ஆகியோர் சீட்டு பணத்தை முடித்துவிட்ட காசோலையை திரும்ப கேட்கும்போது அதை கொடுக்காமல் அந்த காசோலையை பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்ததாக பதிலறிவிப்பில் கூறியுள்ளார்கள் என்றால் பொய்சாட்சி முருகேசன் என்பவரை நீதிமன்றத்தில் தான் பார்த்தேன். எதிரி தனது காசோலை

உள்ள வங்கியில் நான் அவரின் காசோலையை தவறுதலாக வைத்திருப்பதாகவும், அதனால் காசோலையை வங்கியில் செலுத்தினால் பணமாக்க கூடாது என்று அவரது வங்கிகணக்கை நிறுத்தி வைத்திருந்தார் என்பதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வங்கியில் காசோலை திருப்பப்பட்டதை யார் சென்று பெற்றது என்றால் நான் தான் பெற்றேன். வங்கி மேலாளரிடம் பேசினேனா என்றால் போதிய பணம் இல்லை என்று மெமோ தாக்கல் செய்ததால் அவரிடம் பேசவில்லை. காசோலை திருப்பப்பட்ட காரணத்தை வழக்கறிஞர் அறிவிப்பில் கூறவில்லை என்றால் நான் என் வழக்கறிஞரிடம் கூறினேன், அவர் என்ன கூறினார் என்று எனக்கு தெரியாது. நான் மத்திய அரசு ஊழியராக பணிபுரிந்துவிட்டு சட்ட விரோதமாக கட்ட பஞ்சாயத்து, கந்து வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிரி சீட்டு எடுத்த தொகையை செலுத்தி விட்ட பின்பும் அவரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனுக்காக தான் தாக்கல் செய்துள்ளேன். உரிமம் பெறாமல் வட்டி தொழில் செய்வது தவறு என்றால் சரியல்ல. எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்த இவ்வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) பூபதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K